திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்த இரண்டு நகரங்களும் முனிசிபாலிடிகளாக ஏப்ரல் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படுமா? அல்லது, அக்டோபர் மாதத்தில்தான் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தின் உத்தேசமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அப்ஜெக்ஷன்களுக்கு ஆறு வார காலம் தேவைப்படுகிறது சட்டப்படி. ஆகவே, ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிப்பது சாத்தியமில்லை என்று தோன்றுகிறது.

திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, புதிய நகராட்சிகள் திறக்கும்பொழுது அங்கேயுள்ள பொறுப்பானவர்கள் வரிபோடுவதிலே சில தவறுகள் இழைக்கிறார்கள். இதை உடனடியாகப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஸ்பெசிஃபிக்காக சம்பந்தப்பட்ட தகவல்களைத் தெரிவித்தால் வேண்டிய நடவடிக்கை எடுக்கலாம்.

பள்ளி ஆசிரியர்கள்

* 251 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :**
திரு. செ. மாதவன் : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தனியார் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்கள், பள்ளிப் பணியாளர்கள் ஊதியத்தை ஒழுங்குபடுத்த கல்வி இலாகா சமீபத்தில் புதிய உத்தரவு ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) அரசாங்கம் கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பித்துள்ளது—

(1) அரசாங்கச் சம்பள விதங்களின் அடிப்படையில் கல்வித் துறை நிச்சயித்து அங்கீகரித்துள்ள சம்பள விதங்கள் அப்படியே நீடிக்க வேண்டும் ;

(2) ஆசிரியர்கள் 1964 மார்ச் மாதச் சம்பளமாக மொத்தம் எவ்வளவு ஊதியம் பெற்றார்களோ அதில் குறைவு எதுவும் ஏற்படாமல் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் ;

(3) அவர்கள் வாங்கி வந்த சம்பள விதத்தின் அடிப்படையில் 1964 மார்ச் மாதத்திற்குரிய அவர்களுடைய மொத்த ஊதியத்திற்கும் அங்கிகரிக்கப்பட்ட சம்பள விதப்படி 1964 ஏப்ரல் 1-ம் தேதி முதல் அவர்களுக்குச் சேர வேண்டிய மொத்த ஊதியத்திற்கும் உள்ள வித்தியாசத்தை தனிப்பட்ட முறையில் அவருக்கு கொடுக்கப்படுகிற சம்பளமாகக் கருதி அவருக்குக் கொடுத்துவர வேண்டும். அங்கிகரிக்கப்பட்ட சம்பள விதங்களில் பிற்பட்டு அவர் பெறும் சம்பள உயர்வுகளில் மேற்சொன்ன தனிச் சம்பளம் இணைத்துவிட வேண்டும்.

(4) 1960-ம் ஆண்டு சம்பளக் கமிஷனின் பரிவுரைப்படி குறைந்த அளவு உயர்வுத் தொகையான 5 ரூபாய், அரசாங்க மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில், பணியாற்றும் பணியாட்கள் அனைவருக்கும் 1-4-1964-ம் தேதி முதற்கொண்டே வழங்கப்பட வேண்டும்.

11th March 1966]

திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஏற்கனவே வழங்கப்பட்ட சம்பளங்களிலே குறைவு ஏற்படாமல் இருப்பதற்கு பாதுகாப்புத் தரப்படுகிறது என்று கனம் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்களுக்கு சர்க்காருடைய புதிய உத்தரவுப்படி குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட சம்பளத்தைவிடக் குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்ற புகார்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தனவா? அவற்றின் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டனவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : தனியார் நடத்துகின்ற பள்ளிகளைத் திடீரென்று மூடிவிடக்கூடிய நிலைகள் ஏற்பட்டு வருகின்றன. திருவாரூரில் விஜயபுரத்தில் தியாகசுந்தரம் என்பவர் நடத்திவருகிற பள்ளிக்கூடத்தை நிறுத்திவிடுவதற்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலையிலே அங்கே வேலை பார்க்கின்ற ஆசிரியர்களுடைய நிலை என்ன? அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது விதிகளைப்பற்றியது. தனியார் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களைப்பற்றிய விஷயங்கள். மேலும் இது சம்பந்தமான விஷயங்கள் வேண்டுமென்றால் அதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

திரு. சா. கணேசன் : தனியார் பள்ளிகளிலே வேலைசெய்யும் ஆசிரியர்களுடைய சம்பளம், முதலியவற்றை வரையறை செய்து காப்பளித்து அனுப்பியிருக்கிற அரசாங்கத்தின் உத்தரவுகள் எல்லாப்பள்ளிகளிலும் அமல் படுத்தப்படுகின்றனவா? சில இடங்களில் அல்லது பல இடங்களில் அமல்படுத்தப்படவில்லையா? அதனாலே பாதிக்கப்பட்டிருக்கும் ஆசிரியர்கள் சர்க்காருக்கு விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்களா? அப்படியானால், அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிப்பட்டவர் பள்ளிகளுடைய நிர்வாகிகள், பிரதிநிதிகள் எல்லோரையும் வைத்துக் கலந்து பேசித்தான் இந்த முடிவைக் கொண்டு வந்தது. அந்த முடிவை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எல்லாப் பள்ளிகளும் அவற்றை நிறைவேற்றவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி நிறைவேற்றப்படவில்லை என்று ஏதாவது புகார்கள் வந்திருக்கிறதா, இல்லையா ; ஏதாவது செய்தார்களா என்ற தகவல்கள் எல்லாம் என்னிடம் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : சம்பளக் கமிஷன் சிபாரிசுப்படி அவரவர்களுடைய சர்வீஸ் ரிஜிஸ்தரில் 1960-ஆம் வருஷம் மே மாதத்தில் என்ன சம்பளம், பஞ்சப்படி என்று எழுதியிருக்கிறதோ அதை ஒட்டுமொத்தமாகச் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்பது

சம்பளக் கமிஷனின் சிபாரிசு. ஆனால், அதற்குக் குறைவாகக் கொடுக்கும்படி சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்பது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பே கமிஷன் செய்தது வேறு விஷயம். தனியார் நடத்துகின்ற பள்ளிகளிலே சம்பளம் எவ்வாறு நிர்ணயிப்பது என்பது முடிவு செய்யப்பட்டு உத்தரவு போடப் பட்டிருக்கிறது. நான் விடையளித்ததைப்போல் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

(The hon. Member Sri M. V. Karivengadam was seated next to the hon. Member Sri A. P. Dharmalingam)

MR. SPEAKER: The hon. Member Sri M. V. Karivengadam should sit in the seat allotted to him during question-hour.

(Accordingly, the hon. Member Sri M. V. Karivengadam occupied the seat allotted to him.)

திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, புதுக்கோட்டையிலே தனியார் துறையின் மூலம் நடத்தப்பட்டு வந்த சாரதா பள்ளியில், அந்தப் பள்ளியை மூடிவிட்டதற்குப் பிறகு அதிலிருந்த ஆசிரியர்களை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் பணிபுரிய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 5 ஆண்டுக் காலமாக அவர்களுக்கு சம்பளம் பட்டுவாடாச் செய்யப் படவில்லை. அதற்கு அரசினர் டெக்னிக்கல் பாயின்ட்ஸில் கோளாறுகள் இருப்பதற்காக நிறுத்தி வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஐந்து ஆண்டுக் காலம் போதும் என்று கருதி உடனடியாக அவர்களுக்குச் சம்பளத்தை வழங்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றி அங்கத்தினர் தனிக் கேள்வி கேட்டாலும் சரி, அல்லது, எழுதி அனுப்பினாலும் சரி கவனித்து என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யலாம்.

திரு. எ. சுவாமிதாஸ்: கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார்கள் நடத்துகின்ற பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு அரசாங்கம் நேரடியாகவே சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதே மாதிரி மற்ற மாவட்டங்களிலும் தனியார் நடத்துகின்ற பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் சம்பளத்தை அரசாங்கமே நேரடியாகவே கொடுக்க முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தனியார் பள்ளிகளுடைய நிர்வாகிகளை, பிரதிநிதிகளை வைத்துத்தான் ஏற்பாடு செய்யப்படுகிறது. செய்யப்பட்ட ஏற்பாடு நடைபெறுகிறது. அதில் மாறுதல் வேண்டுமென்றால், இப்பொழுது இருக்கிற ஏற்பாடு திருப்திகாமாக இல்லை என்றால் அது கவனிக்கப்படும்.

திரு. செ. மாதவன்: அரசாங்கம் நிர்ணயித்த சம்பளத்திற்கும் ஏற்கனவே குறைவாகப் பெற்றுக்கொண்டிருந்த சம்பளத்திற்கும் இருக்கிற "டிபரன்ஸ் ஆப் பே" யை அரசாங்கமே கொடுக்குமா ? அல்லது தனியார்கள் கொடுப்பார்களா ?

11th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த டிபரன்ஸை பெர்சனல் பேயாக அரசாங்கம் தான் கொடுக்கும்.

திரு. மா. தண்டாயுதபாணி : தனியார் நடத்துகின்ற பள்ளி களிலே குறிப்பாக ஆரம்பப் பள்ளிகளிலே சில பள்ளிகளிலே சரியானபடி எல்லாம் நடத்தப்படவில்லை. அந்தப் பள்ளிகளை பஞ்சாயத்துக் கூட்டுமன்றங்கள் கேட்டால் கொடுக்கப்படுவதில்லை. தனியார் நடத்துகின்ற அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களை பஞ்சா யத்துக் கூட்டமன்றங்களே நடத்துவதற்கு அனுமதி வழங்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி உயர்நிலைப் பள்ளியைப் பற்றியது. ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் தனியார் நடத்துகின்ற பள்ளிகளை பஞ்சாயத்து யூனியன் மேற் பார்வை செய்கிறது. தனிப்பட்டவர்கள் பள்ளிகள் நடத்திக் கொண்டிருந்தால் மேலும் ஒரு பள்ளி புதிதாக ஆரம்பிக்க வேண்டுமா என்பது பரிசிலனைக்குப் பிறகுதான் அனுமதி வழங்கப் படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : தனியார் பள்ளி நிர்வாகிகளை அழைத்து சர்க்கார் அவர்களிடத்திலே ஆலோசனை கேட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் பள்ளியிலே வேலை செய்யும் ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளையும் கலந்து ஆலோசித் தார்களா ? சர்க்கார் செய்யும் இந்த முடிவுக்கு அவர்கள் ஒத்துக் கொண்டார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசிரியர்களைக் கேட்க வேண் டியதில்லை. ஆசிரியர்களுக்கு ஏதாவது குறைபாடு இருந்தால் அரசாங்கத்துக்குத் தெரிவிக்கலாம்.

திரு. கே. பி. பழனி : ஆரம்பக் கல்வி நிர்வாகம் அத்தனையையும் ஒன்றாகச் சேர்த்து போர்டு ஆஃப் எலிமெண்டரி எஜுகேஷன் என்ற அமைப்பை உருவாக்க அரசாங்கம் தெரிவிக்கலாம். 9-00 a.m.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தமாதிரி யோசனை ஒன்றும் இல்லை.

* 252 கேள்வி.—**திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கல்வி இலாகாவில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பிரசவ விடுமுறை (Maternity leave) சம்பளத்துடன் இரண்டு மாதம் என்றிருப்பதை மூன்று மாதமாக நீட்டிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை.

திரு. ம. கமலநாதன் : மெடர்னிடி லீவை மூன்று குழந்தை களுக்கு மேலும் பெறக்கூடிய ஆசிரியைகளுக்கு நீடிப்பதில்லை என்று கேரள அரசு முடிவு செய்திருப்பதைப் போல் நம்முடைய அரசாங்கமும் முடிவு செய்யுமா ?